# வடக்கு மாகாண சபையின் முதலாவது பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர் அமர்வின் போது கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீஏ சந்திரசிறி அவர்கள் 11 கார்த்திகை 2013 அன்று ஆற்றிய முதன்மை உரை

வடக்கு மாகாண சபை
யாழ்ப்பாணம்

வடக்கு மாகாண சபையின் முதலாவது பேரவையின்
இரண்டாவது கூட்டத்தொடர் அமர்வின் போது
கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீஏ சந்திரசிறி அவர்கள்
11 கார்த்திகை 2013 அன்று ஆற்றிய
முதன்மை உரை

வடக்கு மாகாண சபை
யாழ்ப்பாணம்

**வடக்கு மாகாண சபையின் கௌரவ அவைத் தலைவர் அவர்களே,**
**கௌரவ முதலமைச்சர் அவர்களே,**
**கௌரவ அமைச்சர்களே,**
**கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்களே,**
**மற்றும் கனவான்களே, சீமாட்டிகளே,**

**அனைவருக்கும் எனது வணக்கம், ஐபோவான், அஸ்சலாமு அலைக்கும்**

வடக்கு மாகாண சபையின் முதலாவது பேரவைக்கான இரண்டாவது அமர்வில் இன்று உரையாற்றுவதையிட்டு நான் பெருமிதமும் கௌரவமும் அடைகின்றேன்.

இன்று இப்பேரவையின் வைபவ ரீதியான அமர்வினைக் கூட்டியமைக்காக கௌரவ அவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினதும், அவர்களினது அரசின் சார்பாகவும் வடக்கு மாகாண சபைக்கு மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ள உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் மாகாண சபையின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தங்களது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டுமென்று இத்தருணத்தில் தங்களை வேண்டிக்கொள்கின்றேன். தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் தங்களின் பொறுப்புக்களை வடமாகாணத்திலுள்ள சகல மக்களின் நன்மைக்காக முழுமையாக செயற்படுத்துவார்கள் எனவும், இலங்கையின் வடமாகாண அபிவிருத்தியில் ஈடுபாட்டுடன் தங்களின் பங்களிப்பினைச் செய்வார்கள் எனவும் மேலும் மத்திய அரசுடன் இணைந்து நன்நோக்குடன் செயலாற்றுவதன் மூலம் இப் பிராந்தியத்தின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள முடியுமென்பதும் எனது திடமான நம்பிக்கையாகும்.

இலங்கை வாழ் மக்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்ட காலம் தொட்டு வடக்கு மாகாண மக்கள் ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து தங்கள் விருப்பப்படி தமது பிரதிநிதிகளை தெரிவு செய்து வந்துள்ளார்கள். எனினும் முரண்பாடு நிலவிய காலகட்டங்களில் குழப்ப நிலைமை காரணமாக மக்கள் தமது வாக்குரிமையினைப் பயன்படுத்துவதற்கு பல இடையூறுகள் ஏற்பட்டன. ஆயினும் சிலர் தமது வாக்களிக்கும் உரிமையை பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியிலும் பிரயோகித்து வந்துள்ளனர். அந்த இருண்டகால முடிவில் வடக்கு வாழ் மக்கள் தங்களுடைய வாக்களிக்கும் உரிமையை மீண்டும் பிரயோகித்துக் கொண்டார்கள். அதன் பிரகாரம் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட நீங்கள் இன்று இவ் வட மாகாண சபையின் கௌரவ அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். இந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாகிய தங்களுக்கு வடமாகாண சபையின் பால் பாரிய கடப்பாடும் பொறுப்புக்களும் உள்ளன.

எவ்வாறாயினும் நாங்கள் இன்று அனுபவிக்கின்ற இச் சுதந்திரத்தின் வழிகாட்டியான அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களையும், அதற்காக தோள் கொடுத்த போர்

வீரர்களையும், காவல்துறையினரையும் இச்சிறப்பான சந்தர்ப்பத்தில் நினைவு கூர வேண்டியது எனது கடமையாகும். அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தனித்துவம் மிக்க தலைமைத்துவம் மற்றும் பாதுகாப்புப் படையினரின் பாரிய அர்ப்பணிப்புக்களும் இல்லாதிருந்திருப்பின் இம்மாபெரும் வாய்ப்பானது உருவாகியிருக்க முடியாது. குறிப்பாக கைதடியில் இன்றைய நிகழ்வு நடைபெறுவதற்கு இதுவே கால்கோளாக இருந்தது. மேலும் இச்சந்தர்ப்பத்தில் எமது தாய் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக தமது வாழ்வை அர்ப்பணித்த மக்களையும் இவ்விடத்தில் நினைவு கூற கடமைப்பட்டுள்ளேன்.

நீண்டகாலமாக அச்சத்துடனும் சந்தேகத்துடனும் வாழ்க்கை நடாத்தி கொண்டிருந்த மக்கள் தற்போது எந்தவொரு புற சக்திகளின் குறுக்கீடுகளுமின்றி சுதந்திரமாக தமது வாழ்வாதார நடவடிக்கைகளிலும் வர்த்தக முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். எந்தவித தடைகளோ பயங்களோ இன்றி இளம் சந்ததியினர் சிறந்த கல்வி வாய்ப்புக்களையும், எதிர்கால கனவுகளையும் நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு தற்போது கிட்டியுள்ளது. முக்கியமாக அவ் இளம் சந்ததியினர் மகிழ்ச்சியுடனும் சுதந்திரமாகாவும், பாதுகாப்பான சூழ்நிலையிலும் வாழக்கூடியதாக உள்ளது.

கடந்த நான்கு வருட காலத்தில் யாழ்ப்பாணத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்திலும் ஏற்பட்ட மாற்றங்களையும் மெச்சத்தக்க அபிவிருத்திகளையும் எண்ணிப்பார்க்கும் போது அது வியக்கத்தக்கதாக உள்ளது. இந்நாட்டிலிருந்து பிரச்சனைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் குறுகிய நான்கு ஆண்டு காலப்பகுதியில் பாரிய அபிவிருத்திகளையும் சிறந்த சமாதானமான சூழ்நிலையையும் இங்கு நாங்கள் காணமுடிகிறது. அதன் வெளிப்பாடாக பக்கச் சார்பற்றதும் சுமூகமானதுமான தேர்தல் மூலம் இன்று வடக்கு மாகாண சபையானது உருவாக்கப்பட்டு தனக்குரிய அரசியல் பொறுப்புக்களை ஏற்றுள்ளது. இவை எல்லாவற்றையும் பெற்றுத்தந்த அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாகாண சபையின் முறைமைகளுக்கு அமைவாக, வடக்கு மாகாண மக்களின் அபிலாசைகளை அறிந்து அதற்கேற்ற வகையில் எதிர்கால இலக்குகளை நோக்கிய அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கி செல்வது இம்மாகாண சபையின் இன்றைய முக்கிய கடமையாக உள்ளது.

**நிர்வாகம்**

வடக்கு மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்குமுகமாக வட மாகாண சபையானது 05 மாகாண அமைச்சுக்களையும் அவற்றின் கீழ் 17 திணைக்களங்களையும் கொண்டியங்குகின்றது. அத்துடன் கௌரவ முதலமைச்சரின் வழிகாட்டலின் கீழ் பிரதம செயலாளரின் நேரடிக் கண்காணிப்பில் 08 நிறுவனங்கள் தமக்குரிய சேவைகளை ஆற்றுகின்றன. எக்கருமங்கள் தொடர்பில் நியதிச்சட்டங்கள் ஆக்குவதற்கு மாகாண சபை தத்துவமுடையதாக உள்ளதோ, அக்கருமங்களை உள்ளடக்குவதான நிறைவேற்று தத்துவமானது, அம்மாகாண சபை எம்மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்டதோ அம்மாகாணத்திற்கான ஆளுநரினால், நேரடியாகவோ அல்லது மாகாண அமைச்சர் வாரியத்தினைச் சேர்ந்த அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது அவருக்கு கீழமைந்த அலுவலர்கள் மூலமாகவோ, 154 ஊ என்னும் உறுப்புரைக்கிணங்க,

பிரயோகிக்கப்படுதல் வேண்டும். இலங்கை அரசியல் யாப்பின் 13வது திருத்தச் சட்டத்தின் மூலமும் மாகாண சபைகள் சட்டத்தின் மூலமும் ஆளுநர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரம் மற்றும் பொறுப்புக்களுக்கு அமைவாக மாகாணத்திற்கான அரச உத்தியோகத்தர்களை நியமனம் செய்தல், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பன கௌரவ ஆளுநரால் மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

வடக்கு மாகாணமானது 05 நிர்வாக மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கியிருப்பதோடு 34 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 921 கிராம சேவையாளர் பிரிவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மாவட்ட மட்டங்களில் இனங்காணப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் மத்திய அரசினூடாக மாவட்ட செயலகங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சம்மந்தப்பட்ட மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிதி ஒதுக்கீட்டு விடயங்கள் என்பவற்றிற்கு அந்தந்த மாவட்டங்களின் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு பொறுப்பாக இருக்கும். இதற்கு குறித்த தேர்தல் மாவட்டத்தை பிரதிநித்துவபடுத்தும் அமைச்சரவை அந்தஸ்துள்ள கௌரவ அமைச்சர் மற்றும் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர் ஆகியோர் இணைத்தலைமை வகிப்பர்.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

**மாகாணசபை முறைமையின் உருவாக்கம்**

மாகாணசபைகளின் உருவாக்கத்தின் பின்னணி பற்றிய சில விடயங்களை இன்றைய வரலாற்று நிகழ்வில் தங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன். வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயுதமேந்திய பிரிவினரினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை செயற்பாடுகளை முடிவுறுத்தும் பொருட்டு ஒரு ஆரம்ப அரசியல் தீர்வாக 1987ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைகள் முறைமையின் கீழ் உருவாகிய வடக்கு கிழக்கு மாகாண சபையானது இரண்டு வருட குறுகிய கால செயற்பாட்டின் பின்னர் 1991 ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாண சபையானது 2006 ஒக்டோபர் 16 ஆம் திகதி வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணம் என இரு வேறு நிர்வாகப் பிரிவுகளாக வேறுபடுத்தப்பட்டது. அக்காலத்தில் இப் பிராந்தியத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடாத்த முடியாது இருந்தமையினால் வடக்கு மாகாண சபை அமைப்பது சாத்தியப்படாத விடயமாக இருந்தது. வடக்கு மாகாண சபையானது 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது தேர்தல் மூலம் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் செயற்பாடுகள் 2013 ஒக்டோபர் 25 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாகாண சபையை ஸ்தாபித்ததன் நோக்கத்தினை அடைவதற்கு இம் மாகாண சபையானது அர்ப்பணிப்புடன் செயற்படும் என்பதனை நான் திடமாக நம்புகிறேன்.

இலங்கை அரசியல் அமைப்பின் 13வது திருத்தமானது மாகாண சபையின் துறைசார் சட்டவாக்கம், நிர்வாகம் மற்றும் நிதி சம்பந்தமான செயலாற்றல் அதிகாரங்கள் குறித்துக்

காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே, மாகாண சபைகளினதும், மத்திய அரசினதும் பொறுப்புக்கள், விடயப் பரப்புக்கள் பற்றியும் தனித்தனியாக இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மாகாண சபையினதும், மத்திய அரசினதும் உடன்பாட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் அரசியல் யாப்பின் ஒருங்கியை நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பானது மாகாண எல்லைகள், நிர்வாக மற்றும் நிதி தொடர்பான அதிகாரங்கள் பற்றி தெளிவாக விளக்குகிறது. மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள நீங்கள், உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றுமுகமாக இப் பிராந்தியத்தின் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் நோக்கில் அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டம் மற்றும் 1987ம் ஆண்டின் மாகாண சபைகள் சட்டமூலம் என்பவை பற்றிய தெளிவான அறிவையும் விளக்கங்களையும் கொண்டிருப்பது அவசியமாகும்.

எமது அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளானது தமது எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் பொருட்டு மத்திய அரசின் உதவியையும், ஒத்திசைவையும் பெறவேண்டியுள்ளது. உதாரணமாக மாகாண சபையை நடாத்துவதற்குரிய நிதியை ஒவ்வொரு ஆண்டிலும் தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து பெறவேண்டியுள்ளமையை குறிப்பிடலாம். அதே போல் வெளிநாட்டு நிதியுதவியுடன் எந்தவொரு அபிவிருத்தி திட்டங்கள் அல்லது சமூக கருத்திட்டங்களை மாகாணத்தினுள் அமுல்படுத்தும் போது பெறப்படும் நிதியானது மத்திய அரசினூடாக மாத்திரமே கொண்டுவரப்படுதல் வேண்டும்.

மாகாண பொதுச்சேவைக்கான ஆளணியானது மத்திய அரசின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அதேபோல் அரசியல் யாப்பில் ஒருங்கியை நிரலிலுள்ள விடயங்கள் பற்றிய நடைமுறைப்படுத்தலுக்கு மாகாண சபையினால் நியதிச்சட்டங்கள் உருவாக்கப்பட்டு மத்திய அரசு அல்லது பாராளுமன்றத்தின் சம்மதம் பெறப்படவேண்டும். எனவே நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுடன் சிறப்பான இணைப்பினைப் பேணுவதுடன் அவர்களுக்கு உரித்தான பன்முகப்படுத்தப்பட்ட விடயப்பரப்பு சார் நன்மைகளை உரிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மக்களுக்கு பெற்று தரும் வண்ணம் செயற்படுமாறும் மாகாண அமைச்சர்கள், மற்றும் அங்கத்தவர்களுக்கு நான் சிபார்சு செய்கின்றேன்.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

**சமூக பொருளாதார நிலமைகள்**

இலங்கையில் மொத்த நிலப்பரப்பில் வடக்கு மாகாணம் ஏறக்குறைய 13.2% இனைக் கொண்டுள்ளது. 8846.83 சதுரக் கிலோமீற்றர் நிலப்பரப்பளவினைக் கொண்ட இம் மாகாணம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கியது. இம் மாகாணத்தின் மதிப்பிடப்பட்ட சனத்தொகை 1.207 மில்லியன்களாக 2013 நடுப்பகுதியில் உள்ளது. இம்மாகாணமானது விவசாயத்தை பிரதானமாகவும் கால்நடை மற்றும் மீன்பிடி என்பவற்றை உப துறைகளாக கொண்டமைந்த பிராந்தியமாகவும் திகழ்கின்றது. இம்

மாகாணமானது ஏறக்குறைய 1/3 பகுதி கரையோரத்தையும் 250,000 ஹெக்டெயர் பயிர் செய்யக்கூடிய நிலப் பரப்பையும், பொருளாதார செயற்பாடுகளுக்கு முன்னெடுக்கக்கூடிய வகையில் வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எவ்வாறாயினும் உள்நாட்டு முரண்பாடுகள் நடைபெற்ற காலங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவில் காணப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் 2010ம் ஆண்டுக்கு பின்னரான பங்களிப்பானது படிப்படியாக அதிகரித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவில் உதித்த ''வடக்கின் வசந்தம்'' நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வடமாகாணமானது பெற்றுக்கொண்ட அபரிதமான அபிவிருத்தியானது வெளிப்படை உண்மையாகும்.

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 2009 மே மாதத்திலிருந்து 2013 வரையான காலப்பகுதியினுள் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவானது இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதியை விட அதிகமானது என்பதை பெருமகிழ்வுடன் அறியத்தருகின்றேன். கடந்த நான்கு ஆண்டுகளாக வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலின் கீழ் 100,000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதியானது செலவிடப்பட்டுள்ளது.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலுக்கு அமைவாக அத்தியாவசிய உட்கட்டுமானங்கள், சுகாதாரம், கல்வி, உள்ளூராட்சி வேைகள், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலச்சேவைகள் என்பன வடக்கு மக்களின் மேம்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு முரண்பாடுகளுக்கு முன்னதாக அதாவது 1980 களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வடக்கு மாகாணத்தின் பங்களிப்பு ஏறத்தாழ 7% மாக இருந்தது. பின்னர் இது எதிர்மறையான போக்கினைக் காட்டியது. எவ்வாறு இருந்தாலும் விரைவான கட்டுமானங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளின் விரிவாக்கம், வங்கி சேவைகளின் விரிவாக்கம் போக்குவரத்து சேவைகளின் அதிகரிப்பு, அதிகரித்த நெல் விளைச்சல் மற்றும் மீன்பிடி வருமானத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்பவற்றின் மூலம் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது எமது மாகாணம் 2012 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25.9% மான வளர்ச்சியை காட்டியிருந்தது. அத்துடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 4.0% பங்களிப்பினையும் வழங்கியுள்ளது. இது 2011 இல் 3.7% மாக பதிவு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடதக்கதாகும். இம் முன்னேற்றமானது மாகாணத்தில் வளங்கள் திட்டமிடப்பட்ட முறையில் பயன்படுத்தப்பட்டிருப்பதனை குறித்து நிற்கிறது. மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் 2011 இல் ரூபா 202,000 ஆக இருந்த வடக்கு மாகாணத்தின் தலா வருமானமானது 2012 இல் ரூபா 288,000 ஆக அதிகரித்து மாகாணத்தில் சாதகமான நிலையினை தோற்றுவித்திருக்கின்றது.

வடக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்த மக்களின் மீள குடியமர்வு நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. ஏறக்குறைய 353,272 உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் தமது இடங்களில் மீள குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

மீள் குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கான செயற்திட்டங்கள் மற்றும் அடிப்படை உட்கட்டுமான வசதிகள் என்பன குறிப்பிடத்தக்களவு அரசாங்கத்தினாலும் மற்றும் ஏனைய நிறுவனங்களாலும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

உற்பத்தித் துறையினை பொறுத்தவரை பொருளாதாரத்தின் பிரதான துறையாக மீன்பிடி மற்றும் கால்நடை அபிவிருத்தி உட்பட விவசாயத்துறையானது 2009 க்கு பின்னர் குறிப்பிடத்தக்களவு சாதகமான வளர்ச்சியை காட்டியுள்ளது. 2011 மற்றும் 2012ம் ஆண்டுகளில் நாட்டின் மொத்த நெல் விளைச்சலில் வடக்கு மாகாணத்தில் அதிகரித்த நெல் விளைச்சல் பதிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயத்துறை அபிவிருத்திக்காக அரசாங்கம் தொடர்ச்சியான முறையான உதவிகளை வழங்கி வருகின்றது. இதனால் பயிர்செய்கை, மீன்பிடி மற்றும் கால்நடை உற்பத்திகள் படிப்படியாக அதிகரித்து வருவதுடன் விவசாய உற்பத்திக்கான சந்தைவாய்ப்பும் விரிவாக்கமடைந்துள்ளது. இதன்பிரகாரம் மத்திய வங்கி அறிக்கையின்படி, விவசாயத்துறையானது 2012 இல் 19.6% மான பங்களிப்பினை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வழங்கியிருக்கின்றது. அதேவேளை வடமாகாணத்தின் கைத்தொழில் துறையானது கடந்த காலங்களுடன் ஒப்பிடும் பொழுது பாரிய முன்னேற்றம் அடைந்துள்ளதையும் இங்கு குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

ஆடை தொழிற்சாலைகள், சுற்றுலா மற்றும் கட்டுமான நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட பாரிய முதலீடுகள் காரணமாக மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23.5% பங்களிப்பினை கைத்தொழில் துறையானது 2012 இல் கொண்டுள்ளது. 2012 இல் வடமாகாணத்தின் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தினை விட கைத்தொழில்துறை அதிக பங்களிப்பினை கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அரச தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவாக்கம், வணிக நிலையங்களின் ஸ்தாபிதம், வியாபார முனைப்புக்களை ஊக்குவிக்கும் வகையில் மக்களை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழில் வலயங்களை அபிவிருத்தி செய்தல் போன்றன எதிர்காலத்தின் தேவைப்பாடாக உள்ளது.

அரசாங்கமானது வடக்கு மாகாணத்தில் சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு முக்கிய கவனத்துடன் செயற்படுகிறது. இதன் மூலம் இத்துறைகளில் பாரிய முன்னேற்றத்தைக் காணமுடிகிறது. முறையான திட்டமிடுதல் மூலமும் நடைமுறைப்படுத்தல் மூலமும் இத்துறையை மேலும் மேம்படுத்த உரிய கவனமெடுத்து செயற்படவேண்டும் என்பதனை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

**துறைசார் அபிவிருத்தி**

2013ம் ஆண்டின் துறைசார் முன்னேற்றம் மற்றும் அடைவுகள் தொடர்பாக பகுப்பாய்வு செய்வதுடன் எதிர்கால தேவைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெறுவதும் அவசியமானதாகும். அத்துடன் தேசிய கொள்கை நோக்கங்களினுள் உள்வாங்கப்பட்டுள்ள துறைசார் முன்னுரிமைகள் மாகாண அபிவிருத்தி சட்டகத்தின் மாகாண நோக்கங்கள் மற்றும் முன்னுரிமைகளில் சரியான முறையில் இடம்பெறுவதனைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

**விவசாயம்**

''மகிந்த சிந்தனை'' கொள்கை விளக்கமானது விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதனூடாக மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை ஊக்கப்படுத்துவதன் மூலம் விவசாயத்தில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதாகும். வடக்கு மாகாணத்தின் முக்கிய உற்பத்தி மற்றும் வாழ்வாதார துறையாக விவசாயம் காணப்படுகின்றது. ஏறத்தாழ 60% மான மக்கள் தமது முக்கிய பொருளாதார மற்றும் வாழ்வாதாரத்திற்கான செயற்பாடாக விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விவசாயத்துறையின் துரித அபிவிருத்தியின் விளைவாக 2013 இல் நெல் அறுவடையானது 233,317 மெற்றிக் தொன்னாக உயர்வடைதிருந்ததுடன் மேலதிக உற்பத்தியினை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கக் கூடியதாகவும் இருந்தது. பருவகாலப் பயிர்கள், நீண்டகாலப் பயிர்கள், வீட்டுத் தோட்டப் பயிர்கள் என்பன 67,726 ஹெக்டெயரில் மேட்டு நிலப்பயிர்களாக பயிரிடப்படுகின்றது. மரக்கறி உற்பத்தியானது 2013 இல் 122,494 மெற்றிக் தொன்னாக உயர்வடைந்திருந்தது. பழப்பயிர் செய்கையானது குறிப்பாக வாழை, முந்திரிகை என்பன வர்த்தக நோக்கில் பயிர் செய்யப்படுகின்றன. புதிய சந்தை வாய்ப்புக்களின் விளைவாக இப்பயிரிடலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தமது உற்பத்திகளை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் சந்தைப்படுத்த முடிவதுடன் தமது வருமானத்தையும் அதிகரித்துக்கொள்ள முடிகின்றது. இச் செயற்பாடானது கூட்டுறவு முறைமையூடாகவும் அரச தனியார் பங்குடமை மூலமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தொடர்ச்சியாக உற்பத்திகளை அதிகரித்தல் அறுவடைக்கு முந்திய, பிந்திய இழப்புக்களை குறைத்தல் மற்றும் நிறுவனங்களில் இயலளவு அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பன 2014 ஆம் ஆண்டின் முன்னுரிமையாக கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளன. பயிர்ச்செய்கை நிலங்களை அதிகரிப்பதும் நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துவதும் மிகவும் முக்கியமான விடயங்களாக உள்ளன. கூட்டுறவு துறையானது விவசாய உற்பத்தியை சந்தைப்படுத்துவதில் மேலும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். மேலும் மத்திய அரசாங்கத்தின் அனுசரனையை பெற்றுக்கொள்வதனூடாக விவசாய உற்பத்திகளுக்கான சிறந்த சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் விவசாய உற்பத்தியை பெருக்குவதில் இவை முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது.

விவசாயத்துறையை மேம்படுத்தும் பொருட்டு அரசாங்கமானது பல நடவடிக்கைகளை எடுத்து செயற்படுத்தியுள்ளது. முக்கியமாக விவசாய இயந்திரங்கள், உபகரணங்கள், பசளைகள், தரமான விதைகள், நெற்சேமிப்பு வசதிகள் என்பன ''வடக்கின் வசந்தம்'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையின் ஒத்துழைப்பானது இத்துறையை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என நான் நம்புகின்றேன்.

**மீன் பிடி**

வடக்கு மாகாணத்தின் இன்னுமொரு முக்கிய வாழ்வாதார துறையாக நன்னீர் மீன்பிடி காணப்படுகின்றது. இது நீர்ப்பாசனம் மற்றும் விவசாயத்துறையுடன் ஒன்றிணைந்த செயற்பாடாகும். தேசிய நீரியல் அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில்

முத்தையன்கட்டு குளத்தில் நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் பிராந்திய நன்னீர் மீன்பிடி விரிவாக்க அலுவலகம் ஸ்தாபித்தல் போன்ற செயற்பாடுகள் 2013 ஆம் ஆண்டில் நன்னீர் மீன்பிடித்துறையில் குறிப்பிடத்தக்க செயற்திட்டங்களாக உள்ளன. மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய நீரியல் அபிவிருத்தி அதிகார சபையின் இரண்டு செயற்பாடுகள் நன்னீர் மீன்பிடி வளர்ப்புக்காக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய நீரியல் அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து செயற்படுவதனூடாக வடக்கு மாகாணத்தின் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நன்னீர் மீன்பிடித்துறையில் அதிகளவு முதலீடுகளை தருவிப்பதற்கான சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடித்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு குளங்களில் போதுமான நீரின் அளவையும் நீர்வளத்தினையும் உறுதிசெய்யும் வகையில் நீர்ப்பாசன திணைக்களத்துடன் இணைந்து பணியாற்றுவது இச்சந்தர்ப்பத்தில் மிகவும் முக்கியமானதாகும். நன்னீர் மீன்பிடியை மேம்படுத்தும் நோக்குடன் மீனவர்கள் மற்றும் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு திறன்சார் பயிற்சிகள் 2014 இல் தொடர்ந்து அமுலாக்க கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும் 2014 இல் மீன் பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் என்பனவும் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். இம் மாகாணத்தில் நன்னீர் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களுக்கு பயிற்சி மற்றும் விரிவாக்க சேவைகளும் மேலும் வழங்கப்பட வேண்டியுள்ளன. அத்துடன் அரச தனியார் பங்குடமை மூலமாக வடக்கு மாகாணத்தில் மீன்பிடித்துறை மேலும் ஊக்குவிக்கப்படல் வேண்டும். இவ்வகையில் இரணைமடு, கட்டுக்கரைக்குளம், அக்கராயன்குளம், முத்தையன்கட்டுக்குளம், என்பன நன்னீர் மீன்பிடியின் அபிவிருத்திக்காக கருத்திலெடுக்கப்பட வேண்டியுள்ளன.

1/3 பங்கு கடற்கரையை தன்னகத்தே கொண்டுள்ள வடக்கு மாகாணமானது கடந்த 4 ஆண்டுகளில் மீன்பிடிதுறையில் 100% வளர்ச்சியைக் கண்டுள்ளது. எடுத்துக்காட்டாக 2009 ஆம் ஆண்டில் 21,900 மெற்றிக் தொன்னாக இருந்த மீன்பிடி 2012 இல் 59,340 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது. பலநாள் கலங்கள், ரோலர் படகுகள், வெளிஇணைப்பு இயந்திர மீன்பிடிப் படகுகள் என்பன வடக்கு மாகாணத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் அதிகரித்த அளவில் மீன்பிடியில் ஈடுபடுகின்றன என்பதும் இங்கு குறிப்பிடப்பிடத்தக்கது. தற்போது மீன்பிடித்துறையில் முகங்கொடுத்துள்ள பிரதான பிரச்சனையான இலங்கையின் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடிக்கும் பிரச்சனையை தீர்க்கும் வகையில் வடமாகாண சபையானது மத்திய அரசுடன் இணைந்து செயற்படுவதற்கு தனது பூரண ஆதரவினை நல்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**நீர்ப்பாசனம்**

நீர்ப்பாசனத்துறையானது விவசாயம் மற்றும் நன்னீர் மீன்பிடி போன்றவற்றுடன் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட துறையாகும். இந்த மாகாணத்தைச் சேர்ந்த இலட்சத்திற்கு அதிகமான மக்கள் தமது வாழ்வாதார செயற்பாடுகளுக்கு நீர்ப்பாசனத்தினை நம்பி இருக்கின்றனர். மகிந்த சிந்தனை தொலைநோக்கானது, 2020 இல் சமமான நம்பகமான அளவு மற்றும் நிலைத்திருக்கக் கூடியதும் பயனுறுதிமிக்கதுமான சூழல் நட்பு முறையிலான போதுமான நீர் வழங்கல் நடவடிக்கையுடன் விவசாய அபிவிருத்திக்கும் உந்து சக்தியாக நீர்ப்பாசனத்துறை இருக்கும் என்பதனை தெளிவாக வரையறுத்திருக்கின்றது. எனவே இத்துறையானது மாகாணத்தில் ஒரு முக்கிய பங்கினை

கொண்டிருக்கின்றது. மாகாண நீர்ப்பாசன துறையின் கீழ் 45 நடுத்தர நீர்ப்பாசன திட்டங்களும் 9 பாரிய நீர்ப்பாசன திட்டங்களும் உள்ளடக்கப்படுகின்றன. அதே நேரத்தில் சிறு நீர்ப்பாசனத்தின் கீழ் 2,066 குளங்களும் உள்ளடக்கப்படுகின்றன. 2013 ம் ஆண்டில் ஏறத்தாழ 70,181 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதிகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.பொருத்தமான நீர் சேமிப்பு தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல், வடிகால் மற்றும் வெள்ள தடுப்பு அணைகளை மேம்படுத்தல், உற்பத்திதிறன் மேம்பாடு, பௌதீக வளங்கள், நிலத்தடி நீர் முகாமைத்துவம், விவசாய சமூகத்தை வலுவடையச்செய்தல், மனித மற்றும் நிறுவன இயலளவினை மேம்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்களும் 2014 ம் ஆண்டு கவனம் செலுத்தப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன. இவ்வகையில் இரணைமடு பாரிய அபிவிருத்தித்திட்டம் வடக்கு மாகாண மக்கள் மத்தியில் முக்கியத்துவம் பெறுகிறது.

**கால்நடை**

எமது நாட்டின் பால்தேவையின் 15% அளவிளான சிறிய தொகை மட்டுமே உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்றது. நாம் இந்த நிலையை மாற்ற வேண்டியவர்களாக உள்ளோம். இறக்குமதி செய்யும் பால்மாவுக்கு சலுகைகளை வழங்கி வெளிநாட்டு கம்பனிகளை பயன்பெற செய்வதற்கு பதிலாக மீண்டும் பால் உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி செல்ல வேண்டும். கால்நடை கைத்தொழிலானது தொழில் முயற்சியாளர்களுக்கான முக்கியமான ஒரு துறையாக வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்றது. விவசாய நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு மேலதிக வருமானத்தினை தரும் ஒரு துறையாக கால்நடை கைத்தொழில் இப் பிராந்தியத்தில் கணிக்கப்படுகின்றது. பல்வேறு பங்குதாரர்கள் அதாவது அரசாங்கதுறை, தனியார்துறை, கூட்டுறவுத்துறை மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு வகையான திட்டங்கள், நிகழ்ச்சி திட்டங்களினுடாக இத்துறையினை மேம்படுத்துவதில் ஈடுபட்டுவருகின்றன. கடந்த காலங்களில் மாகாணத்தில் சினைப்படுத்தும் நிலையங்களை ஸ்தாபித்ததன் மூலமும் தனியார்பண்ணைகளை மேம்படுத்துவதன் மூலமும் நல்லின கால்நடைகளை உற்பத்தி செய்வதற்கான கால்நடைகளின் உற்பத்தித்திறன்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மாகாணத்தில் சிறப்பான கால்நடை வைத்திய சேவைகளை வழங்குவதற்கு தேவையான உட்கட்டுமான வசதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அரசின் சிறந்த நடவடிக்கைகள் காரணமாக நாள் ஒன்றுக்கான பால் உற்பத்தியானது 2013 ம் ஆண்டு 77, 000 லீற்றரில் இருந்து 90,000 லீற்றராக உயர்ந்துள்ளது. 2013ம் ஆண்டில் கோழி இறைச்சி உற்பத்தியானது 75% ற்கு மேல் அதிகரித்துள்ளது அத்துடன் முட்டை உற்பத்தியின் அளவும் அதிகரித்துள்ளது. நாள் ஒன்றுக்கு 100,000 லீற்றராக பால் உற்பத்தியினை அதிகரிப்பதும் கோழி இறைச்சி, முட்டை உற்பத்தியில் தன்னிறைவு மட்டத்தினை அடைவதுமே 2014 ம் ஆண்டில் இத்துறையின் முக்கிய நோக்காக உள்ளது. எவ்வாறு இருந்தாலும் உள்ளூர் பால் உற்பத்தி பொருட்களின் நுகர்வினை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மாகாணத்தின் எல்லா மட்டங்களிலும் நடாத்தப்படவேண்டிய தேவை உள்ளது. இத்துறையில் எதிர்காலத்தில் அபிவிருத்தியில் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டியவையாக வீடுகள் தோறும் கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்தல், உற்பத்தித்திறன் மிக்க கால்நடைகளை உருவாக்கல், கோழி வளர்ப்பில் தொழில்நுட்ப பரிமாற்றம், ஆரோக்கியமான கால்நடைகளை பராமரித்தல், சந்தை வசதிகளை பலப்படுத்தல், நிறுவனங்களின் இயலளவினை அதிகரித்தல் மற்றும் கால்நடை தீவன வளங்களினை

மேம்படுத்துதல் என்பன முக்கியம் பெறுகின்றது. இத்துறையின் அபிவிருத்திக்கு கூட்டுறவுச்சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள் என்பன எதிர்காலத்தில் அதிக பங்களிப்பினை வழங்கவேண்டும்.

**கல்வி**

இலங்கையினை அறிவின் கேந்திர மையமாக கொண்டுவருவதற்காக ஒவ்வொரு மட்டத்திலும் மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய மாற்றங்களை கல்வித் துறையானது எதிர்பார்த்துள்ளது. இலங்கையில் மகிந்த சிந்தனைக்கமைய தேசிய இலக்கினை பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தினை வடக்கு மாகாணம் கொண்டிருத்தல் வேண்டும். வடபகுதியில் கல்வியினை முன்னேற்றுவதற்கு அரசாங்கத்தின் முயற்சியினால் 1066 மொத்த பாடசாலைகளில், இயங்குகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை 983 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. தேசிய நிகழ்ச்சித்திட்டங்களான “1000 பாடசாலைகள்” மற்றும் “5000 ஊட்டப் பாடசாலைகள்” என்பன வெற்றிகரமாக மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. பிள்ளை நேய அணுகுமுறைகள் 500 பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. “மகிந்தோதய” ஆய்வுகூட வசதிகள் 90 பாடசாலைகளுக்கு மாகாணத்தில் வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு மூலங்களிலிருந்து தேவைப்படுமிடத்து கல்விசார் உட்கட்டுமான வசதிகள் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக எழுத்தறிவு வீதம் 88% ற்கு உயர்ந்துள்ளதுடன் பாடசாலைக்கு தொடர்ந்து செல்வோர் வீதமும் 73% ற்கு 2013 ம் ஆண்டில் அதிகரித்துள்ளது. இதன் மூலம் பாடசாலை இடைவிலகுவோர் வீதமும் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த 4 ஆண்டு காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின் கல்வித்தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தினால் 1,764 ஆசிரியர்கள் சேவையில் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

விளையாட்டு மற்றும் கலாச்சார விவகாரமும் உப துறைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளது. 2014 இன் நோக்குகளாக முழுமையான அபிவிருத்தியடைந்த இரண்டாந் தரப் பாடசாலைகள் மற்றும் அதனுடைய ஊட்டப்பாடசாலைகள், மீள குடியமர்ந்த பாடசாலைகளின் புனரமைப்பும், புனர்நிர்மாணமும் மற்றும் பல்வேறு சமூகங்களுக்கிடையில் சமூக ஒருமைப்பாட்டினை மாகாணத்திலும் நாட்டிலும் ஏற்படுத்துதல் முக்கியமானதாகும். விளையாட்டு மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் எதிர்காலத்தில் சாத்தியமான வழிகளில் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களாகும். சாதாரண கல்வி முறையை சமாளிக்க முடியாத பிள்ளைகளுக்கு முறைசாரா கல்வி பெறும் சந்தர்ப்பத்தினை வழங்குவது இன்னுமொரு முன்னுரிமைப்படுத்தப்படவேண்டிய பகுதியாக 2014 ல் காணப்படுகின்றது. கல்வியில் உயர்தரமான சேவை வழங்குவதனை உறுதிப்படுத்தல், ஆசிரியர்களின் இயலளவினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பாடசாலைகளில் சுகாதார மேப்பாட்டினை முன்னேற்றுதலும் 2014 ம் ஆண்டில் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பகுதிகளாக காணப்படுகின்றது.

முன்பள்ளி கல்வியிலும் உரிய கல்விமுறைகள் அறிமுகப்படுத்தப்படவேண்டிய தேவை உள்ளது. இந்நோக்கில் 2014இல் நிரல் அமைச்சுடன் இணைந்து சரியான முறைமை ஒன்றினை ஏற்படுத்துவது அவசியமாகும்.

**சுகாதாரம்**

‘‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’’. ஆகவே சுகாதாரம் மாகாணத்தில் முக்கிய துறையாக விளங்குகின்றது. மகிந்த சிந்தனை கொள்கையின் அடிப்படை நோக்கின் கீழ் சுகாதார சேவையில் பௌதீக மற்றும் தொழில்நுட்ப உட்கட்டுமானங்களை விருத்தி செய்வதன் மூலமும் மனித வளங்களை மேம்படுத்துவதன் மூலமும் சிறந்த உளப்பாங்கு மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமும் பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்க முடியும். இத்துறையானது மேலைத்தேய மற்றும் கீழைத்தேய மருத்துவ முறைகள் ஊடாக மாகாண மக்களுக்கு சேவையாற்றுகின்றது. ஆரம்ப, மற்றும் இரண்டாம் நிலை சுகாதார நிறுவனங்கள், நோய் பராமரிப்பு மற்றும் நோய் தடுப்பு நிறுவனங்கள் ஆகியன மாகாண சுகாதார திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது. ‘‘வடக்கின் வசந்தம்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 06 ஆதார வைத்தியசாலைகள், 45 பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் 52 கிராமிய சுகாதார நிலையங்கள் என்பன வடக்கு மாகாண மக்களின் சுகாதார சேவையின் பொருட்டு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

சுகாதார சேவையினை வழங்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை வட மாகாணம் 2013 ஆம் ஆண்டில் அடைந்துள்ளது. அத்துடன் இது எதிர்காலத்திலும் தொடரும். அநேகமான மீள குடியமர்ந்த பிரதேசங்களில் பொது சுகாதார உத்தியோகத்தர்களின் நியமனத்துடன் பொது சுகாதார சேவையினை பெறக்கூடிய வாய்ப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தாய் சேய் சுகாதார பராமரிப்பு சேவைகள் பின்தங்கிய இடங்களிற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் மனித வள இயலளவும் மாகாணத்தில் வலுப்படுத்தப்படுகின்றது. இதன் பலனாக முக்கிய சுகாதார குறிகாட்டிகளான தாய் சேய் மரண வீதம் மற்றும் போசாக்கு குறிகாட்டிகள் சாதக நிலையில் உள்ளது. சுகாதார அமைச்சினால் 2013 ம் ஆண்டானது தொற்றா நோய்களை தடுப்பதற்கான ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.இதற்கமைய சுகவாழ்வு நிலையங்களினுடாக 35 வயதிற்கு மேற்பட்டோருக்கான தொற்றா நோய்களை இனங்காண்பதற்கான பரிசோதனைகள் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. டெங்கு ஒழிப்பு மற்றும் உள்ளூர் மட்ட போசாக்கு நிகழ்ச்சி திட்டங்கள் என்பன 2013 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2014 ஆம் ஆண்டில் தொற்றா நோயை தடுப்பதும், மீள குடியேற்றப்பட்ட இடங்களில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான விடுதி வசதிகளை வழங்குவதும் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களாக உள்ளன. சுகாதார முறைமையை முன்னேற்றுதல், தாய் சேய் நலன்களை மேம்படுத்தல், தொற்றும் மற்றும் தொற்றா நோய்களை கட்டுப்படுத்தலும் தடுத்தலும், முழுமையான நோய் பராமரிப்பு சேவைகளை வழங்குதல், அவசர சிகிச்சை மற்றும் விபத்து சேவைகளை சீரமைத்தல், போசாக்கு மற்றும் நலிவுற்ற சமூகத்தின் சுகாதார மேம்பாடு ஆகியன 2014 ல் மாகாண சுகாதார துறையினால் கவனம் செலுத்தப்பட வேண்டியவைகளாக உள்ளன.

## உள்ளூராட்சி

மகிந்த சிந்தனையானது பொது மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதனூடாக பொது மக்களின் வசதியானதும், சொகுசானதும், திருப்திகரமானதுமான வாழ்க்கைமுறையை உறுதிப்படுத்துகிறது. இத்துறையானது பொதுச்சேவைகளை உரிய முறையில் வழங்குவதில் முக்கிய பங்கெடுக்கும் வகையில், முக்கியமாக சந்தை வசதிகள், கிராமிய வீதிகள், பொது தரிப்பிடங்கள், கொல்களங்கள், மயானங்கள், சனசமூக நிலையங்கள் என்பவற்றை சிறப்பாக பராமரிக்கின்றது. 2013 இல் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் அடிப்படை வசதிகளை முன்னேற்றுவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. மீள்குடியேற்றப்பட்ட இடங்களில் கிராமிய வீதிகளின் புனர்நிர்மாணம், சுகாதாரம் மற்றும் குடிநீர்வசதிகள், கிராமப்புற மின் இணைப்பு வசதிகள் என்பன மக்கள் பங்கேற்புடன் ‘‘புறநெகும’’ கருத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி அதிகார சபைகளூடாக வழங்கப்பட்டன. வடக்கு மாகாணத்தில் இக்காலப்பகுதியில் பொது வசதிகளான சந்தை நிர்மாணம், பொது மண்டபங்கள், சனசமூக நிலையங்கள், நூலகங்கள், பொது விளையாட்டு மைதானங்கள் மற்றும் கொல்களங்கள் என்பன மேம்படுத்தப்பட்டுள்ளன. திண்ம கழிவு முகாமைத்துவம் மற்றும் சேதனப்பசளை தயாரிப்பு என்பவற்றிற்கான தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுமக்கள் பங்கேற்புடனான தீர்மானமெடுத்தல் 34 உள்ளூராட்சி அதிகாரசபைகளூடாக தொடர்ச்சியான முறையில் இம்மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2014 இல் இம் மாகாணத்தின் மீள்குடியேற்றப்பட்ட இடங்களிலும் ஏனைய இடங்களிலும் பொதுச்சேவைப் பயன்பாடுகள், பொதுவசதிகள் என்பன, நல்லாளுகையுடன் கூடிய சிறந்த சேவைகள் ஊடாக வழங்கக்கூடியவாறு மனித வளமானது மேம்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சியானது, தரமான கிராம வீதி இணைப்பு, பொது சேவைப்பயன்பாடு, உள்ளூராட்சி அதிகார சேவைகள் மற்றும் கழிவு முகாமையும் தேசிய மின்வலையமைப்பில் இணைக்கப்படாத பகுதிகளுக்கு மாற்று மின் வலு என்பவற்றிலும் 2014 ல் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. குறிப்பாக மீள்குடியேற்றப்பட்ட மக்கள் வதியும் பகுதிகளுக்கு போதிய வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பது இன்றியமையாததாகும்.

## வீதிகள்

எமது நாட்டு மக்களுக்கு திருப்திகரமான போக்குவரத்து சேவைகள் கிடைப்பதை மகிந்த சிந்தனை உறுதிப்படுத்துகின்றது. வடக்கு மாகாணமானது ஏறத்தாழ 1,960 கிலோமீற்றர் மாகாண வீதிகளையும் 7,600 கிலோமீற்றர் கிராமிய வீதிகளையும் கொண்டுள்ளது. வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களமானது 1,960 கிலோமீற்றர் ‘‘சீ’’ மற்றும் ‘‘டீ’’ தர வீதிகளை நிர்மாணம் செய்வதற்கும் பராமரிப்பதற்கும் பொறுப்பாகவுள்ளது. இதில் 1,115 கிலோமீற்றர் வீதிகள் ‘‘சீ’’ மற்றும் ‘‘டீ’’ தர தார் வீதிகளாகவும் ஏனையவை கிரவல் வீதிகளாகவும் உள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான செயற்திட்டங்கள் மூலம் 350 கிலோமீற்றர் வீதிகளும், 842 கிலோமீற்றர் மாகாண வீதிகளும், 1,282 கிலோமீற்றர் கிராமிய வீதிகளும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. தரமான வீதி இணைப்புக்களை பராமரித்தல், வீதி போக்குவரத்து பாதுகாப்பை மேம்படுத்தல், சூழல் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் நிறுவனங்களின் இயலளவை மேம்படுத்துவதன் மூலமும் இத்துறையின் செயற்திறனை மேம்படுத்தல் என்பன 2014ம் ஆண்டின் முக்கிய இலக்குகளாகும்.

**சுற்றுலாத்துறை**

சுற்றுலாத்துறையானது இம்மாகாணத்தில் வளர்ந்து வரும் ஒரு முக்கிய துறையாகும். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை கவரும் ஒரு மாகாணமாக வட மாகாணம் உள்ளது. இத்துறையானது நேரடி மற்றும் மறைமுக நன்மைகளையும் இம்மாகாணத்திற்கு வழங்குகிறது. அரசாங்கமும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி பற்றி பல வழிகளிலும் அழுத்திக் கூறுகின்றது. வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையில் முதலீடு செய்யக் கூடிய பல வளமான இடங்கள் உள்ளன. சுற்றுலாத்துறைக்கான இடங்கள், சிறுவர் பூங்காவுடன் கூடிய பொழுதுபோக்கு இடங்களின் அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை தகவல் வெளியீடுகள் என்பன முக்கியமான செயற்பாடுகளாக 2013 ல் அமைந்திருக்கின்றன. பல்வகைத்தன்மையான சுற்றுலா கவர்ச்சி மிக்க இடங்கள் என்பவற்றை உருவாக்குதல், சுற்றுலா துறையை நோக்கிய சந்தைப்படுத்தலுடன் கூடிய உற்பத்திகளை உருவாக்குதல், சுற்றுலாத்துறை மேம்பாட்டினுடாக உள்ளூர் சமூகத்தின் வருமானத்தினை உயர்த்துதல் என்பன முக்கியமாக கருத்திலெடுத்து செயற்பட வேண்டியுள்ளது.

எனவே முறையான திட்டமிடல் மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பவற்றின் மூலமும் நிரல் அமைச்சின் ஆலோசனையுடனும் இத்துறையினை மேம்படுத்த வேண்டுமென்று நான் சிபார்சு செய்கின்றேன். இத்துறையானது எமது எதிர்கால சந்ததியின் முக்கிய துறையாக அமையும் என்பதை வலியுறுத்தி கூற விருப்புகின்றேன்.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே**
**கௌரவ முதலமைச்சர் அவர்களே**
**கௌரவ அமைச்சர்களே,**
**கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்களே,**

**நிறைவாக,** அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் எண்ணக்கருவில் உதித்த “வடக்கின் வசந்தம்” செயற்திட்டத்தின் மூலம் தேசிய அபிவிருத்திக் கொள்கைச் சட்டகத்திற்கமைவாக வடக்கு மாகாண சபையானது புதிய செயன்முறைகளைச் செயற்படுத்தும் என நான் நம்புகின்றேன். இந்த வகையில் வடமாகாண மக்களின் நன்நோக்கத்திற்காகவும், எதிர்கால சுபீட்சத்திற்காகவும் விடாமுயற்சியுடன் நேர்மையானதும் பொறுப்பு வாய்ந்ததுமான ஒரு அபிவிருத்தி கொள்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்துவது முக்கியமானதாகும். எனது இன்றைய உரையை அடிப்படையாகக்கொண்டு மாகாணசபைக்கான தந்திரோபாயத் திட்டமிடலை உருவாக்கி மாகாண நோக்கங்களை அடைவதனூடாக தேசிய இலக்குகளை அடைந்து இலங்கையின் இறைமைக்கும் ஒற்றுமைக்கும் உந்துசக்தியாக இருக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கின்றேன். எதிர்காலத்தில் விரைவாக **“ஆசியாவின் ஆச்சரியம்”** எனும் இலக்கினை எம் தாய் நாடு அடைவதற்கு மாகாண அடைவுகள் வழிவகுக்கும். அவ்வகையில் இந்த தந்திரோபாயத் திட்டமிடல் மூலம் துரித வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் மக்கள் அனுபவிக்கும் வண்ணம் மாகாண சபையானது செயற்பட வேண்டுமென்பது எனது பேரவாவாகும்.

**நன்றி**